[4th August 1965

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

திரு. என். ஆர். தியாகராஜன்: அப்போது அங்கு வேலை பார்த்த சப்-இன்ஸ்பெக்டர் அந்தக் குளத்தின் மறுகால் தண்ணீர் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்துவிடுமென்று பயந்து அந்தக் குளத்தை வெட்டிவிட்டதால்தான் அந்த மாதிரி சேதம் ஏற்பட்டது என்று அந்தக் குளத்து சொந்தக்காரர்களே புகார் செய்ததும் பத்திரிகையில் வந்ததும் அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கேள்வி திருநெல்வேலி எக்ஸ்பிரஸ் பற்றியது. அதற்கு இல்லை என்று சொன்னேன். விபத்து நடந்தது திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில். அந்த விவரத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

The accident appears to have been caused on account of the embankment underneath the track having been washed away to a length of nearly 500 feet due to heavy rains. Owing to the very heavy rains on the afternoon of 23—12—1964, the flood from the Sirumalai hills flowing over the fields appears to have washed away the embankment. The Annasamudram tank in Orathattu village close to the Kodai Road railway station had also breached. The Collector of Madurai inspected this tank. A wide breach has been formed at the sluice of the tank. It is said that the breach had occurred after the train accident took place. But it is quite likely that the tank might have been overflowing even before the accident took place and this water together with the flood from the Sirumalai hills might have forced its way through the railway embankment and washed it away.

It is reported that the train was proceeding at a cautious pace on account of the downpour of rains and cyclonic wind and that but for this and the prompt action of the driver in pulling up the train, when the track was found to give way, the accident could have resulted in derailment of more carriages and injury and death to many more passengers.

இவ்வளவுதான் என்னிடம் தகவல் இருக்கிறது. என்ன அஜாக்கிரதை என்பது பற்றிய தகவல் என்னிடமில்லை.

Madurai Thiagarajar Arts College

* 47 Q.—SRI N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state —

(a) whether the students of the Madurai Thiagarajar Arts College were attacked by hooligans on 25—3—1965;

(b) whether six students of the College were injured during the attack;

(c) whether the students sought the help of Police; and

(d) if so, the details of the help given by the Police?

4th August 1965]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) to (d) On 12th March 1965 two groups of students of Madurai Thiagarajar Arts College attacked each other within the College premises. Five students sustained simple injuries. The injured students reported the occurrence to the Police. As the incident occurred within the College campus, the Police asked the Principal to take action against the accused students.

SRI K. ANBAZHAGAN : Mr. Chairman, Sir, on a point of order. The main question is : ' Whether the students of the Madurai Thiagarajar Arts College were attacked by hooligans on 25th March 1965 ' and the answer given by the Hon. the Chief Minister refers to a different date, namely 12th December 1965 and refers to a scuffle between the students themselves. I therefore submit that the answer does not meet the point raised in the main question.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *கேள்வி என்ன இருந்தாலும் என்ன விடை அளிக்கமுடியுமோ அதுதான் அளிக்க முடியும்.*

திரு. என். ஆர். தியாகராஜன் : *தலைவர் அவர்களே, மதுரை தியாகராஜர் கல்லூரியில் உள்ள இந்தி எதிர்ப்புக் கோஷ்டியைச் சேர்ந்த ** மாணவர்கள் அடிக்கடி தேசிய பரம்பரையைச் சேர்ந்த மாணவர்களை தாக்கிக் கொண்டிருப்பதைப் பற்றி சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா? அதன் முதல்வர் மீது வழக்கு தொடரப் படுமா ?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *தாக்கப்பட்ட, பாதிக்கப்பட்ட மாணவர்கள் வழக்கு தொடரலாம். மாணவர்களுக்குள் கட்சிகள் இருப்பது எனக்குத் தெரியும். அவ்வாறு சம்பவங்கள் நடைபெற்றால் இப்போது ஒரு சம்பிரதாயம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. பிரின்சுபால் கோரினால்தான், போலீஸ் காலேஜுக்குள் பிரவேசித்து நடவடிக்கை எடுத்துக்கொள்வது என்று இருக்கிறது. ஆகையால் சில மாணவர்கள் கல்லூரிக்கு உள்ளே நடைபெறுவதைப் பற்றி போலீசில் புகார் செய்தபொழுது அவர்கள் ' பிரின்சுபாலிடம் சொல்லுங்கள் ' என்று சொல்லியிருக்கிறார்கள்.*

திரு. க. அன்பழகன் : *தலைவர் அவர்களே, கேள்வி 25—3—65-ல் நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றிக் கேட்கப்பட்டிருக்கிறது. கேள்வி எண் 47 என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகையால் 25—3—65-ல் அங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் தரமுடியுமா?*

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *12—3—1965-ல் நடைபெற்றதைதான் குறிப்பிட்டேன். இந்தக் கேள்வி கேட்ட கனம் உறுப்பினர் அவர்களே அதற்கு விளக்கம் கூறிவிட்டார்கள். 25 என்று தவறாகப் போட்டிருக்கலாம். மாணவர்களுக்குள்** ஒருவரோடொருவர் சண்டை போட்டுக்கொண்டதாக உறுப்பினர் சொல்லியிருக்க*

** Expunged as ordered by the Chair.

[4th August 1965

கிரூர். முன்னைய கேள்விக்கு திருநெல்வேலி எக்ஸ்பிரஸ் என்று திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸை குறிப்பிடப்பட்டது போல இதில் 12-க்கு பதில் 25 என்று சொல்லியிருக்கலாம். ஆகையால் இந்த விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

SRI K. ANBAZHAGAN : Sir, on a point of order. On 25th March 1965 there has been some trouble, and the students had been beaten by some hooligans, the main question certainly refers to that point and date, and that cannot be overlooked because there has been another incident on the 12th March 1965. If the Hon. the Chief Minister does not like to answer that specific question, he should say that answer cannot be given. But he cannot on that account refer to another incident saying that that is the answer to the main question. I think the answer is not to the point and, therefore, I say it raises a point of order.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think there can be any point of order if the answer does not relate to the particular date given in the question, namely, 25th March 1965. The hon. Member refers to an attack by certain hooligans on the 25th March 1965. I would like the hon. Member to give me particulars as to the attack by the hooligans on the students. Then I can enquire and give the answer.

MR. CHAIRMAN : Now this interpellation has not been given notice of by hon. Member Sri K. Anbazhagan who just now raised the point of order. The interpellation was given notice of by another hon. Member. Just as the Hon. the Chief Minister said that that hon. Member had referred to the Tirunelveli Express instead of to the Trivandram Express in his previous question, here also it may be a case of confusion of dates. If the hon. Member who raised the point of order had also given notice of the interpellation, then there might be some point. But the hon. member Sri K. Anbazhagan is not concerned with the interpellation. Therefore I do not think there is any point of order.

SRI K. ANBAZHAGAN : May I request the Hon. Chairman to permit me to say this. There has been an incident on the 25th March 1965 when some hooligans attacked the students. After having admitted the question, and that question having been taken up in this House, it is open to every member of the House to emphasise his right and raise the point. Therefore I request the Chairman to ask the Hon. Chief Minister to give a definite answer to that question.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have given as proper an answer as I can, but the information that I have is that on the 25th March 1965 there was no attack on students by certain hooligans. If the hon. Member has particulars with him, I would like him to give those particulars to me so that I can look into the matter as to who were the hooligans who attacked the students on the 25th March 1965 within the Thiagarajar College premises, Madurai.

MR. CHAIRMAN : Probably the emphasis is on 'hooligans'.

4th August 1965]

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, நான் எழுதிய தேதி இதில் தவறாக அச்சிடப்பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தால்தான் இத்தனை தொல்லையும். இந்தி எதிர்ப்புக் காலிகள் செய்ததைப் பற்றி நான் அதிகமாக உபகேள்விகள் கேட்டுவிடுவேன் என்பதற்காகத்தான் மீண்டும் மீண்டும் இப்படி திருப்பிவிடப்படுகிறது என்று நினைக்கிறேன் **

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கல்லூரியில் மாணவர் களுக்குள்ளே இரு பிரிவுகள் இருக்கின்றன. அவர்களுக்குள் இந்த சண்டை வருகிறது. போலீசாரும் உள்ளே போவதில்லை. சில சமயத்தில் பிரின்சுபால் நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கிறது. நானும் மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன் அவர்களுக்கு விமோசனம் இல்லாமல் அவதிப் படுவதையும் பார்க்கிறேன்.

திரு. என். வி. நடராசன் : இந்தியை எதிர்ப்பவர்கள் என்ற காரணத்தால் காலிகள் என்று சொல்வது முறையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தியை எதிர்ப்பதோடு காலித்தனமாக நடந்தால் காலிகள் என்று சொல்வது தவறில்லை.

திரு. என். வி. நடராசன் : இந்தியை எதிர்ப்பவர்கள் எல்லாம் காலிகள் என்று கனம் உறுப்பினர் சொல்வது அந்தப் பிரச்னையை திசை திருப்பிவிடுவதாக இருக்கிறது. அப்படிப்பட்ட வார்த் தைகளை யாரும் இங்கு உபயோகிக்காமல் இருப்பது சபையின் கௌரவத்திற்கு ஏற்றது என்பதை அமைச்சர் அவர்களும் உணர்வார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தியை எதிர்ப்பவர்கள் எல்லோரும் காலிகள் என்று சொல்வது தவறு என்று நான் ஒப்புக் கொள்கிறேன். ஒரு சிலர் அதில் காலித்தனமாக நடந்துகொண் டார்கள். அவர்களை அப்படிச் சொல்வதால் தவறு இல்லை. அந்த விதமாகத்தான் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எல்லோரும் உணர்வார்கள். 3-20 p.m.

• • • • •

இது மாணவர்களைப் பற்றிய விஷயம். திரும்ப திரும்ப காலிகள் என்று சொல்லவேண்டாமென்று அங்கத்தினர்களை கேட்டுக்கொள் கிறேன். கல்லூரிக்குள்ளே தகராறு இருக்கிறது. ஒருவருக் கொருவர் அடித்துக் கொள்கிறார்கள். சில மாணவர்கள் துன்பப் படுகிறார்கள். அதில் அரசாங்கத்திற்குள்ள சங்கடத்தை எடுத்துச் சொன்னேன். பிரின்சுபாலைக் கேட்காமல் உள்ளே நுழைவதில்லை என்ற சம்பிரதாயத்தை போலீசார் அனுசரித்து வருகிறார்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன்: இந்தியை எதிர்க்கும் சிலரை கல்லூரி சொந்தக்காரர்கள் தூண்டிவிடுகிறார்கள் என்பது அரசாங்

** Expunged as ordered by the Chair

[4th August 1965

கத்திற்குத் தெரியுமா? அந்தக் கல்லூரி சொந்தக்காரரான தியாக ராஜ செட்டியார்மீது அதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமா?

SRI SI. PA. ADITANAR : Mr. Chairman, Sir, on a point of order. My friend is making allegations against some one who is not here in this House to defend himself. He is making allegations of a criminal nature. Is it in order to make allegations of a criminal nature against the proprietor of a College who is not here to defend himself?

MR. CHAIRMAN : It would not be a point of order. But there are nice ways of putting questions.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Chairman, I think we have adopted a convention in this House that we do not cast aspersions on people who are not here in this House. So, the hon. Member may withdraw his question.

SRI SI. PA. ADITANAR : Withdraw.

திரு. என். ஆர். தியாகராஜன் : Leader of the House சொன்னால் அதை நான் கேட்கத் தயாராக இருக்கிறேன். வேறு ஒருவர் சொல்ல அதிகாரமில்லை. அதை ஏற்றுக் கொள்ளமாட்டேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : What the hon. Member Sri Aditanar has said is out of order, and the hon. Member may now withdraw.

திரு. கே. ராமதாஸ்: தலைவர் அவர்களே, அந்த கல்லூரி சம்பந்தப்பட்ட பெரிய மனிதர்கள்தான் இந்த மாணவர்களைத் தூண்டி விடுகிறார்கள் என்பது உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு சில கல்வி ஸ்தாபனங்கள் சரியாக கவனம் 'செலுத்தவில்லை' என்று அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்துக் கொள்கிறது. இதைப்பற்றி மேலும் கேள்விகள் கேட்கவேண்டாமென்று கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : Is the hon. Member Sri Thiagarajan withdrawing his question.

திரு. என். ஆர். தியாகராஜன்: தியாகராஜ செட்டியார் சம்பந்தப்பட்ட கேள்வியை withdraw செய்து கொள்கிறேன். ஆனால் withdraw பண்ணுகிறாயா இல்லையா என்று பயமுறுத்துவது போல ஒரு அங்கத்தினர் கேட்டார். அதை முதலில் அவர் செய்யவேண்டும். அதோடு தனித் தமிழர் என்று சொல்லிக்கொள்ளும் அவர் ஏன் ஆங்கிலத்தில் பேசினார்? அதையும் வாபஸ் பெறவேண்டும் அவர். (சிரிப்பு). 'withdraw'

SRI K. ANBAZHAGAN : The hon. Member Sri Thiagarajan referred to an hon. gentleman who is not here. So, the hon. Member should withdraw his question.